# தகவல் குறிப்பேடு

சமூக சுகாதாரம் பேணுவோர் தன்னார்வ சான்றிதழ் திட்டம் என்பது, பாரம்பரிய மறுமலர்ச்சி அறப் பேரவை (FRLHT) பெங்களூரும், இந்திய தரக்குழுமம் (QCI) புதுடெல்லியும், இணைந்து பாரம்பரிய, வைத்தியர்களின் திறமையை, ISO 17024-ன் படியான சர்வதேச சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு, மருத்துவ சான்றிதழ் வழங்கும் ஒரு தேசிய திட்டம் ஆகும்.

பாரம்பரிய சமூகம் சார்ந்த பாரம்பரிய வைத்தியர்கள், இந்திய நாட்டு மக்களின் சுகாதாரம் சார்ந்த தேவைகளை சந்திப்பதில், கிராமப்புறங்களில் குறிப்பிடத்தக்க பங்காற்றி வருகின்றனர். குறிப்பாக இம் மக்கள் ஆயுஷ்-ன்; (ஆயுர்வேத, யோகா மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா, ஹோமியோபதி) மருத்துவ பணியாளர்களின் தனிப்பட்ட குழுமத்தை சார்ந்தவர்கள் ஆவர். இவர்கள் மக்களின் சாதாரண நோய்கள், மஞ்சள் காமாலை, விஷக்கடி, பாரம்பரிய மகப்பேறு, பாரம்பரிய எலும்பு முறிவு வைத்தியம், வாதம், போன்றவற்றிற்கு வைத்தியம் செய்பவர்கள் ஆவர். இவர்கள் தங்களை சார்ந்த, ஏழை மக்களுக்கு வைத்தியம் செய்பவர்கள் ஆவர். தேசிய இந்திய மருத்துவ ISM கொள்ளை அறிக்கை 2002, தேசிய ஊரக சுகாதார இயக்கம் (NRHM) அறிக்கை (2005), இந்திய அரசின் திட்ட கமிஷன் ஐந்தாண்டு திட்ட ஆவணங்கள் (2007 மற்றும் 2012), தேசிய சுகாதார குழும அறிக்கை (2017), ஆகியவை பாரம்பரிய சமூக சுகாதாரம் பேணுவோரின் நிலைப்பாட்டை அதிகார பூர்வமாக உறுதிசெய்துள்ளது. ஆயுஷ்-ன் இத்தகைய சமூகம் சார்ந்த பாரம்பரிய வைத்தியர்களை பலப்படுத்தும் எந்த ஒரு திட்டமும் செயல்படுத்தப்படவில்லை. இந்த புறக்கணிப்பின் காரணமாக பாரம்பரிய வைத்திய முறைகளின் வளர்ச்சி தடுக்கப்படுகிறது. பொது சுகாதார அமைப்பின் மனிதவள தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, தன்னார்வ சான்றிதழ் திட்டம் மூலமாக பாரம்பரிய வைத்தியர்களுக்கு சான்றுதல் அளித்து மேலும் அவர்களின் திறன்களை திடப்படுத்துவதை, பொது சுகாதார நிபுணர்கள் மற்றும் தொழில் வல்லுனர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

பல்துறை சுகாதார விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்ப பல்கலைக் கழகத்தினுள் அமைந்துள்ள பாரம்பரிய மருத்துவ மரபுகள் மற்றும் கொள்கை மையம் என்பது இந்திய தர குழுமத்தால் (QCI) அங்கீகரிக்கப்பட்ட ஒரு சான்றிதழ் வழங்கும் மையம் ஆகும். இம்மையம் தனது தன்னார்வ சான்றிதழ் வழங்கும் திட்டத்தின் படி, சமூகம் சார்ந்த சுகாதார வைத்திய துறைகளான சாதாரண நோய்கள், மஞ்சள் காமாலை, விஷக்கடி, பாரம்பரிய மகப்பேறு, பாரம்பரிய எலும்பு முறிவு வைத்தியம், வாதம், போன்றவற்றை குணப்படுத்தும் திறமையுள்ள, சமூகம் சார்ந்த பாரம்பரிய வைத்தியர்களுக்கென ஒரு சான்றிதழ் வழங்க உள்ளது. இந்திய தர குழுமம் (QCI) மற்றும் பாரம்பரிய மருத்துவ மறுமலர்ச்சி அறப் பேரவை (FRLHT) இணைந்து நடத்தும் இத் திட்டத்தின் கீழ் சான்றிதழ் பெற விருப்பமும் தகுதியும் உள்ள விண்ணப்ப தாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**நோக்கம்:**

இத்திட்டத்தின் நோக்கம் எவையெனில் விருப்பமுடைய சமூகம் சார்ந்த பாரம்பரிய வைத்தியர்களுக்கு அவர்களின் அறிவு மற்றும் திறமையை மதிப்பீடு செய்து சான்றிதழ் வழங்குதல் ஆகும்.

**தகுதிகள்:**

விண்ணப்ப தாரர்கள் படிவத்தின் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்ப மூலம் விண்ணப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அவர்களது தகுதி கீழ் கண்டவாறு இருக்க வேண்டும்.

**a)** பாரம்பரிய வைத்தியர்கள் அவர்கள் வசிக்கும் பகுதியில் உள்ள சாதாரண நோய்கள், மஞ்சள் காமாலை, விஷக்கடி, பாரம்பரிய மகப்பேறு, பாரம்பரிய எலும்பு முறிவு வைத்தியம், வாதம், போன்ற நோய்களுக்கு பாரம்பரிய வைத்தியம் செய்பவர்களாக இருக்க வேண்டும்.

**b)** வயது: 28 அல்லது அதற்க்கும் மேர்ப்பட்டு இருக்க வேண்டும்.

**c)** அனுபவம்: குறிப்பிட்ட ஒன்று அல்லது மேற்பட்ட துறைகளில் குறைந்த பட்சம் 10 ஆண்டுகள்.

**தேர்வு மொழி** : தமிழ்

## ஒர வடேட்பாளரக்க கட்டணம்:

1. ஒர ஸ்ட்ரீம் பயிற்சி 11,500/- (18% GST சரேர்க்கப்பட்டுள்ளத)
2. இரண்ட நீரோடைகள் பயிற்சி 15,000/- (18% GST சரேர்க்கப்பட்டுள்ளத)
3. மூன்ற நீரோடைகள் பயிற்சி 16,500/- (18% GST சரேர்க்கப்பட்டுள்ளத)
4. நான்க நீரோடைகள் பயிற்சி 17,500/- (18% GST சரேர்க்கப்பட்டுள்ளத)
5. ஐந்த நீரோடைகள் பயிற்சி 18,500/- (18% GST சரேர்க்கப்பட்டுள்ளத)

தேர்வு கட்டணத்தை வரை ஓலை **(Demand Draft)** யாக "**UTDHST**" - என்னும் பெயரில் BENGALURU -ல் மாற்றத் தக்க வகையில் அனுப்ப வேண்டும். செலுத்தப்பட்ட கட்டணம் திரும்ப பெற முடியாது.

**தேர்வு பகுதிகள்** : தமிழ்நாடு மற்றும் அனைத்து இந்திய மாநிலங்கள்

**ஒரு துறைக்கான குறைந்த பட்ச விண்ணப்பதாரர்கள் எண்ணிக்கை** - 10

**பரிட்சிக்கும் முறை மற்றும் கால அளவு:**

அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்ப தாரர்களுக்கு மதிப்பீடு குழுமத்தின் முன் ஆஜராக முன்தகவல் அனுப்பப்படும்.
4. குழுவில் குறிப்பிட்ட துறை சார்ந்த குறைந்தபட்சம் இரண்டு பாரம்பரிய வைத்திய நிபுணர்களுடன், ஆயுஷ் துறையின் ஒரு மருத்துவர் மற்றும் சமூகமருத்துவம் அல்லது பொது சுகாதாரம் சார்ந்த ஒருவரும் இருப்பர்.

சான்றிதழ் வழங்க மதிப்பீடு செய்யும் முறை மற்றும் கால அளவு கீழ் குறிப்பிடப் பட்டுள்ளது.

பல தேர்வு கேள்விகள் மூலம் அறிவு திறன் மதிப்பீடு - 30 நிமிடம்
நோய் முன்னிளைப்படுதுகை - 30 நிமிடம் 10%
நோய் முன்னிளைப்படுதுகை குறித்து வாய்மொழித் தேர்வு 30 நிமிடம்
மூலிகைகளின் அடையாளம் , மருந்து தயாரித்தல், மூலிகை மற்றும் மருந்து
விளக்கம் 30 நிமிடம் 30%
செயற்களத்தில் புல சரிப்பார்த்தல் 60 நிமிடம் 40 %

பாரம்பரிய சமூக சுகாதார வழங்குநர்களின் வேட்பாளர்களுக்கு மட்டுமே அந்த சான்றிதழ் வழங்கப்படும், அவர்கள் அந்தந்த ஸ்ட்ரீமில் தங்கள் திறனை மதிப்பிடுவதில் குறைந்தது 70% மதிப்பெண்களைப் பெறுவார்கள்.

## மதிப்பீட்டுக்குழு:

மேற்கண்ட துறைகளில் குறைந்த பட்சம் 15 ஆண்டுகள் அனுபவமுள்ள இரண்டு பாரம்பரிய வைத்திய நிபுணர்கள் மதிப்பீடு செய்வார்கள். மேலும்  சித்தா, ஆயுர்வேதா, யுனானி மருத்துவர் ஒருவர் மற்றும் ஒரு சமூக மருத்துவம் அல்லது பொது சுகாதார நிபுணர் ஒருவர் பார்வையாளராக பங்கேற்பார்கள்.

சான்றிதழ், வழங்கப்பட்ட பாரம்பரிய வைத்தியர்களின் பெயர்கள் தேசிய தர குழுமத்தின் வலைதளத்தில் வெளியிடப்படும்.

முறையீடு அல்லது புகார் அளிக்க விரும்பும் பாரம்பரிய வைத்தியர்கள்  எழுத்து மூலம் மையத் பாரம்பரிய மருத்துவ மரபுகள் மற்றும்  கொள்கை மையத்திற்கு கீழ் கண்ட முகவரியில் தெரியப்படுத்தவும்.

**புகார் மற்றும் முறையீடுகள்:**

இந்த சான்றளிப்பு திட்டத்திற்கு சம்பந்தமான புகார் அல்லது முறையீடுகளை நிர்வாகக் குழு தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரவேண்டும். மரபு மருத்துவ செயல்பாட்டாளர் அல்லது மரபு மருத்துவ செயல்பாட்டாளர் அளிக்கும் சேவைகளை அனுபவிப்பவர்கள் அல்லது வேறு பங்குதாரர்களிடமிருந்து வந்துள்ள புகார்களை நிர்வாகக் குழு பரிசீலிக்கும். நிர்வாகக் குழு தலைவரின் தொடர்புக்கான விவரம் கீழே அளிக்கப்பட்டுள்ளது.

**For more Details contact:**

**Dr Leena Chandra Wadia,**
Dean, Education and Outreach
Chairperson, Managing Committee,
Member, Complaints Sub-Committee

**Dr B N Prakash,**
Head, TDU Personnel Certification Body
Email: bn.prakash@tdu.edu.in
https://www.tdu.edu.in/tdu-vcstchp

**Shri Suresh Hegde**
Joint Registrar, Finance, Accounts and Administration andMember,
Appeals Sub-Committee

**Mrs. Srividya Venkatesh,**
Member, Managing Committee and
Member, Complaints Sub-Committee

**Dr Girish Kumar**
Member, Managing Committee and
Member, Appeals Sub-Committee

**Prof. G Hariramamurthi**
Member, Managing Committee

**Mr. Ravi Kumar**
Member, Managing Committee

Address: -The University of Trans-disciplinary Health Sciences and Technology, #74/2, Jarakabande /Kaval, Attur Post, Via Yelahanka, Bengaluru-560064.Ph: + 91-80-2856 8000, Extension: 107/129